பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 616 **நாள்: 26.10.2026**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் அவர்கள் தண்டையார்பேட்டை மண்டலம், நேதாஜி நகரில் ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இன்று (26.10.2026) மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. ப. வெங்கடரமணன் அவர்கள், மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் முனைவர் நெ. மரியவில்சன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-38க்குட்பட்ட நேதாஜி நகர், 6ஆவது தெருவில் மூலதன நிதியில் ரூ.21.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, நியாயவிலைக் கடையில் உணவுப் பொருட்களின் தரம் குறித்து ஆய்வு செய்து, நியாயவிலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்கினர். இக்கடையின் வாயிலாக 956 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில், மண்டல அலுவலர் திரு.ஏ.ராஜ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.